සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | | | |
|---|---|---|---|
| ඉස්ලාම් | I, II | | පැය තුනයි |
| இஸ்லாம் | I, II | | மூன்று மணித்தியாலம் |
| Islam | I, II | | *Three hours* |

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்<br>Additional Reading Time - 10 minutes | | வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

## இஸ்லாம் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** 'ஸுன்னா' என்ற பதத்துக்கு மிகப் பொருத்தமான கருத்து எது?
(1) நிர்வாகம் (2) அணுகுமுறை (3) அனுபவம் (4) வழிமுறை

**2.** நபிமார்களுக்குரிய பண்புகளுள் 'இஸ்மத்' எனும் பண்பு குறிப்பது
(1) பாவங்கள், பிழைகள் செய்வதிலிருந்து பாதுகாப்புப் பெற்றுள்ளமை
(2) அல்லாஹ்வின் தூதை எத்திவைத்தல்
(3) மனிதர்களின் பாவங்களை மன்னிக்க அல்லாஹ்விடம் மன்றாடுதல்
(4) வேதங்கள் அருளப்பட்டமை

**3.** அல்குர்ஆனில் 'தவ்ஹீதை' வலியுறுத்தும் விதத்தில் இடம் பெற்றுள்ள தனிச் சூறா எது?
(1) சூறதுல் இஹ்லாஸ் (2) சூறதுல் பாத்திஹா
(3) சூறதுல் பலக் (4) சூறதுந் நாஸ்

**4.** நபி (ஸல்) அவர்கள் தொடர்பான **பிழையான** கூற்று
(1) அவர்கள் மனித, ஜின் வர்க்கம் இரண்டிற்கும் பொதுவானவராக அனுப்பப்பட்டார்கள்
(2) மதீனாவில் இருந்து மக்காவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள்
(3) நபியாகவும், ரஸூலாகவும் அனுப்பப்பட்டார்கள்
(4) உலுல் அஸ்ம்களில் ஒருவராவார்கள்

**5.** பிரதானமான நம்பிக்கைகளை அகீதா துறை அறிஞர்கள் நான்கு பிரிவுகளாக பிரித்து விளக்குகின்றனர். அவற்றுள் சட உலகுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்ட மலக்குகள், ஜின்கள், ஷைத்தான்கள், ரூஹ் போன்றன அடங்கும் பிரிவு
(1) அல்-இலாஹிய்யாத் (2) அந்நுபுவ்வாத்
(3) அஸ்ஸம்இய்யாத் (4) அர்ரூஹானிய்யாத்

**6.** அபுல்ஹஸன் அல்-அஷ்அரி (ரஹ்) அவர்கள் பின்வரும் எச்சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவர்களாவார்?
(1) மு..தஸிலா (2) ஜபரிய்யா
(3) முர்ஜிஆ (4) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ

**7.** வேதங்கள் அருளப்படுவதற்கு முன்னர் பல நபிமார்களுக்கு அருளப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை 110 ஆகும். இவற்றுள் ஸுஹுபுகள் வழங்கப்பட்டதாக அல்குர்ஆன் இரண்டு நபிமார்களை மட்டுமே குறிப்பிடுகிறது. அவர்கள் முறையே,
(1) இப்ராஹீம் (அலை), மூஸா (அலை) (2) ஆதம் (அலை), மூஸா (அலை)
(3) இத்ரீஸ் (அலை), இப்ராஹீம் (அலை) (4) முஹம்மது (ஸல்), ஷீத் (அலை)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** நபி இத்ரீஸ் (அலை) அவர்களே நெசவுத் தொழிலை அறிமுகஞ் செய்ததாகக் கூறும் இஸ்லாமிய வரலாற்றாசிரியர்
(1) வஸ்ஸாப் ஆவார். (2) அல் வாஹிதி ஆவார்.
(3) இப்னு கல்தூன் ஆவார். (4) அல் தஹ்ஹாபி ஆவார்.

**9.** கி. பி. 1864 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பதவி உயர்வு பெற்று பின்னர் கண்டி மாநகர சபையின் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றியவர் யார்?
(1) நீதிபதி அக்பர் (2) முஹம்மது காஸிம் சித்திலெப்பை
(3) முஹம்மது லெப்பை (4) கலாநிதி பதுர்ஹானுத்தீன் ஜாயா

**10.** பின்வரும் அட்டவணையில் 'அ' நிரலில், நான்கு குலபாஉர் ராஷிதூன்களின் பெயர்களும் 'ஆ' நிரலில் அவர்கள் தமது கிலாபத் ஆட்சிக்காலப்பிரிவில் ஆற்றிய முக்கிய பணிகளும் தரப்பட்டுள்ளன.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) அபூபக்ர் (ரழி) | A - கடற்படையை உருவாக்கியமை |
| (2) உமர் (ரழி) | B - பிரபல இலக்கண மேதை அபுல் அஸ்வத் அத்துஅலி அவர்களின் மூலம் அல்குர்ஆன் எழுத்துக்களுக்கு உயிர்க்குறி இட்டமை |
| (3) உஸ்மான் (ரழி) | C - ஸக்காத் வழங்க மறுத்த கூட்டத்தின் சூழ்ச்சியை முறியடித்தமை |
| (4) அலி (ரழி) | D - ஹிஜ்ரி கலண்டர் ஆண்டை அறிமுகம் செய்தமை |

மேலே 'அ' நிரலுக்குப் பொருத்தமான விதத்தில் முறையே 'ஆ' நிரல் ஒழுங்குபடுத்தப்படும்போது சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A, B, C, D (2) A, C, B, D (3) B, A, C, D (4) C, D, A, B

**11.** 'இஜ்திஹாத்' என்பது யாது?
(1) இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவு
(2) உலமாக்களின் ஆலோசனைச் சபை
(3) இஸ்லாமிய சட்டத்துறை நிறுவனங்கள்
(4) பிரச்சினையொன்றுக்குத் தீர்வைப்பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்படும் முயற்சி

**12.** நபி (ஸல்) அவர்களிடம் தன்னையும் பதவியில் அமர்த்துமாறு கேட்டபோது, "நீங்கள் பலவீனமானவர். பதவி அமானிதமாகும். தகுதியானவர் அதைப் பெற்று, அதன் கடமைகளை செய்தாலன்றி மறுமையில் அது கவலையும், கைசேதமும் தருவதாகும்." என நபி (ஸல்) அவர்கள் எந்த ஸஹாபியைப் பார்த்து கூறினார்கள்?
(1) உஸ்மான் (ரழி) (2) முஆவியா (ரழி)
(3) முஆத் இப்னு ஜபல் (ரழி) (4) அபூதர் அல் கிபாரி (ரழி)

**13.** "என்னுடைய உம்மத்தில் ......... பொய்யர்கள் தோன்றுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாம் நபி என்று வாதாட்டம் செய்வர். ஆயினும் நானே நபிமார்களுக்கெல்லாம் இறுதியானவனாக இருக்கின்றேன். எனக்குப் பின் வேறு எந்த நபியும் இல்லை" (அபூதாவூத்)
இந்த ஹதீஸில் குறிப்பிடப்படும் பொய்யர்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 20 (3) 30 (4) 40

**14.** "ஒரு கத்ரிலிருந்து இன்னொரு கத்ருக்கு நாம் செல்கிறோம்" என்று கூறிய ஸஹாபி யார்?
(1) அபூபக்ர் (ரழி) (2) உமர் (ரழி) (3) உஸ்மான் (ரழி) (4) அலி (ரழி)

**15.** ஹஜ்ஜில் நிறைவேற்றப்பட வேண்டியதும் உம்ராவில் **உள்ளடக்கப்படாததுமான** ஒரு பர்ளு எது?
(1) இஹ்ராம் அணிதல் (2) தலைமுடி களைதல்
(3) அரபாவில் தரித்தல் (4) ஸஃயு செய்தல்

**16.** புஹாரி கிரந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை
(1) 4000 (2) 4341 (3) 4800 (4) 7275

**17.** அலி (ரழி) அவர்களைக் கொலை செய்தவன்
(1) அபூலுஃலுஆ (2) அபூஜஹ்ல்
(3) அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜிம் (4) உபை இப்னு ஸலூல்

**18.** பின்வருவனவற்றுள் வுழூ செய்யப் பயன்படுத்த **முடியாத** நீர்
(1) இள நீர் (2) கடல் நீர் (3) ஆற்று நீர் (4) குளத்து நீர்

[பக். 3 ஐப் பார்க்க

**19.** "மு.்.மின்களில் சிறந்தவர் நற்குணமுடையவரே" என்பது
(1) அல்குர்ஆன் வசனம் (2) நபி மொழி
(3) உமர் (ரழி) அவர்களின் கூற்று (4) அபூ ஹுறைறா (ரழி) அவர்களின் கூற்று

**20.** எகிப்தில் யாருடைய ஆட்சிக்காலத்தில் ஷாபிஈ மத்ஹப் அரச மத்ஹபாக பிரகடனப்படுத்தப்பட்டது?
(1) கலீபா இரண்டாம் ஹகம் (2) சுல்தான் ஸலாஹுதீன்
(3) கலீபா முதவக்கில் (4) கலீபா ஹாரூன் அர்ரஷீத்

**21.** திருமணம் செய்ய சக்தியற்ற இளைஞர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள செய்யவேண்டிய 'அமல்' என நபியவர்கள் கூறிய வணக்கம்
(1) தர்மம் செய்தல் (2) உம்ரா செய்தல்
(3) நோன்பு நோற்றல் (4) ஸலாத்தைப் பரப்புதல்

**22.** 'கியாஸ்' என்ற துணை மூலாதாரத்தின் ருகூன்கள் எத்தனை?
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

**23.** 'நப்ஸுல் அம்மாரா பிஸ்ஸூ்' என்பதன் கருத்து
(1) தீமையை ஏவும் உள்ளம்
(2) தன்னையே நொந்துகொள்ளும் உள்ளம்
(3) அமைதியடைந்த உள்ளம்
(4) இறைவனால் பொருந்திக்கொள்ளப்பட்ட உள்ளம்

**24.** நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களின் பாதுகாப்புக்காக அவர்களை ஹபஸாவுக்கு அனுப்பிய போது அவர்களைப் பாதுகாத்த மன்னர்
(1) முகவ்கிஸ் (2) நஜ்ஜாஷி (3) ஹிர்கல் (4) வாஸியஸ்

**25.** பூமியில் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிர்வகிப்பதைக் குறிக்கும் அறபுச் சொற்பதம்
(1) இமாறத் (2) இபாதத் (3) கிலாபத் (4) அமானத்

**26.** 'ஜாமிஉல் குர்ஆன்' எனும் பெயரால் அழைக்கப்பட்ட கலீபா யார்?
(1) அபூபக்ர் (ரழி) (2) உமர் (ரழி) (3) உஸ்மான் (ரழி) (4) அலி (ரழி)

**27.** கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் மரணித்த அரேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவை மனைவிகளையும் அநாதைகளான பிள்ளைகளையும் அரேபியாவுக்கு அனுப்பி வைத்த இலங்கை மன்னன் யார்?
(1) இரண்டாம் பராக்கிரமபாகு (2) இரண்டாம் புவனேகபாகு
(3) இரண்டாம் அக்கபோதி (4) இரண்டாம் தாடோபதிஸ்ஸ

**28.** "மார்க்க சட்டங்கள் தெரிந்தவர்கள் மட்டுமே நம்முடைய கடை வீதிகளில் விற்றல் வாங்கலில் ஈடுபட வேண்டும், சட்டமறியாதவர் சந்தைக்கு வரவேண்டாம்" என்று கூறிய ஸஹாபி யார்?
(1) அலி (ரழி) (2) உமர் (ரழி)
(3) உஸ்மான் (ரழி) (4) இப்னு அப்பாஸ் (ரழி)

**29.** உலகில் மனிதர்களால் செய்யப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் எந்தச் செயல் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டால் இப்லீஸ் மிகவும் மகிழ்ச்சியடைகின்றான்?
(1) குடும்பத்தைப் பிரித்தல் (2) வட்டியை ஊக்குவித்தல்
(3) மது அருந்த வைத்தல் (4) சூனியம் செய்தல்

**30.** பின்வருவனவற்றுள் தடை செய்யப்பட்ட வர்த்தக நடவடிக்கை எது?
(1) அல் முழாரபா (2) அல் இஜாரா (3) அல் முஷாரகா (4) அர்ரிபா

**31.** பின்வருவோரில் ஒரு மணமகன் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்ட பெண்
(1) மனைவியின் தாய் (2) மாமியின் மகள் (3) மகனின் மனைவி (4) சகோதரனின் மகள்

**32.** ஸகாத் நிஸாபை அடைந்த நிலையில் இலங்கை ரூபா. 2 000 000 (இருபது இலட்சம்) வைத்திருக்கும் ஒருவர் வருட இறுதியில் கொடுக்க வேண்டிய ஸகாத்தின் அளவு
(1) ரூபா. 20 000 (2) ரூபா. 30 000 (3) ரூபா. 40 000 (4) ரூபா. 50 000

**33.** ஒருவர் தனது மனைவியை ஒரே முறையில் மூன்று தலாக்குகள் கூறி விவாகரத்து செய்வது
(1) தலாக் பிதஈ (2) தலாக் சுன்னி (3) தலாக் ரஜஈ (4) அல்குல்உ

[பக். 4 ஐப் பார்க்க

**34.** பின்வருவனவற்றை அவதானிக்குக.

| அ | ஆ |
|---|---|
| (1) பர்ளு | A - மது அருந்துதல் |
| (2) ஹறாம் | B - ஜனாஸாவுக்குரிய கடமைகள் |
| (3) பர்ளு கிபாயா | C - ஸலாம் கூறுதல் |
| (4) சுன்னத்து | D - ஐவேளைத் தொழுகை |

மேலே "ஆ" நிரலின் கீழுள்ள சொற்களை "அ" நிரலின் கீழுள்ள சொற்களுக்கேற்ப பொருத்தமாக ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடைத் தொகுதி
(1) A, C, B, D (2) B, C, A, D (3) D, A, B, C (4) D, A, C, B

**35.** குறிப்பிட்ட காலத்தில் வாழும் முஜ்தஹிதுகளில் ஒருவரோ, சிலரோ குறிப்பிட்ட பிரச்சினைக்கான முடிவு சம்பந்தமாக தமது எவ்வித கருத்தையும் தெரிவிக்காது மௌனம் சாதித்திருப்பின் அம்முடிவு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) இஜ்மாஉஸ் ஸுகூதி (2) இஜ்மாஉல் அக்ஸரிய்யா
(3) இஜ்மாஉஸ் ஸரீஹ் (4) இஜ்மாஉல் கவ்லி

**36.** பின்வரும் பதங்களை அவதானிக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A - | முதவாதிர் | B - | தவாப் | C - | கிரான் |
| D - | ஹரம் | E - | ரய்யான் | F - | அரபா |
| G - | அர்ரிபா | H - | இஜாரா | I - | ஸவ்ம் |

மேற்படி அட்டவணையில் நோன்போடும் ஹஜ்ஜோடும் **தொடர்புபடாத** சொற்தொகுதியை மாத்திரம் கொண்ட தெரிவு
(1) A, B, D (2) A, G, H (3) D, E, F (4) F, G, H

**37.** "ஸுப்ஹான றப்பியல் அ.'லா வபிஹம்திஹி" என்ற திக்ர் தொழுகையில் எச்சந்தர்ப்பத்தில் ஓதப்பட வேண்டும்?
(1) ஸுஜூது செய்யும் போது (2) ருகூஉ செய்யும் போது
(3) நடு இருப்புக்கு வரும் போது (4) ஸலாம் கொடுத்த பின்

**38.** பின்வரும் அட்டவணையில் "அ" நிரலில் நபி (ஸல்) அவர்களோடு தொடர்பானவர்களின் சிறப்புப் பெயர்களும் "ஆ" நிரலில் அவற்றுக்கான கருத்துக்களும் தரப்பட்டுள்ளன.

| அ | ஆ |
|---|---|
| (1) அஹ்லுல்பைத் | A - வஹியை எழுதுவோர் |
| (2) உம்மஹாதுல் மு.'மினீன் | B - நபியவர்களின் குடும்பத்தினர் |
| (3) அஸ்ஹாபுஸ்ஸுப்பா | C - நபியவர்களின் மனைவிமார் |
| (4) குத்தாபுல்வஹி | D - திண்ணைத் தோழர்கள் |

மேலே "அ" நிரலுக்கும் பொருத்தமான விதத்தில் "ஆ" நிரல் எழுதப்படும் போது சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A, B, C, D (2) B, C, D, A (3) D, C, A, B (4) D, C, B, A

**39.** 'அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ' என்பது
(1) முன்சென்ற நபிமார்களைப் பின்பற்றுவோரைக் குறிக்கின்றது.
(2) நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் பின்பற்றிய அதே வழிமுறையைப் பின்பற்றி வாழ்வோரைக் குறிக்கின்றது.
(3) வழிதவறிய கொள்கைகளைப் பின்பற்றுவோரைக் குறிக்கின்றது.
(4) அல்குர்ஆனை மாத்திரம் பின்பற்றுவோரைக் குறிக்கின்றது.

**40.** 'இலங்கையில் இஸ்லாம் அதன் ஆரம்ப காலங்களிலேயே அறிமுகமானது' என்பதற்கான ஆதாரங்களில் **உள்ளடங்காதது**
(1) அப்பாஸிய கலீபா, காலித் இப்னு பகாயா என்ற போதகரை கொழும்புக்கு அனுப்பி வைத்தமை
(2) கி. பி. 715 ஆம் ஆண்டில் சிந்து பிரதேசம் முஹம்மத் பின் காஸிம் என்பவரால் கைப்பற்றப்பட்டமை
(3) அறபிகள் இலங்கைக்கு வருவதற்கு முன் கிரேக்கர்கள், ரோமர்கள் இலங்கையில் கால் பதித்தமை
(4) நபி (ஸல்) அவர்களின் தூதைச் சுமந்துகொண்டு வஹப் இப்னு அபீ ஹப்ஸா என்ற தோழர் சீனாவுக்கு சென்றமை

* *

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

16 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | |
|---|---|
| ඉස්ලාම් | I, II |
| இஸ்லாம் | I, II |
| Islam | I, II |

## இஸ்லாம் II

✳ முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

✳ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் தெரிவுசெய்த ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) சுப்ஹுஃத் தொழுகையைத் தொடர்ந்து ‘கலிமதுத் தௌஹீதை’ ஓதுபவருக்கு கிடைக்கும் நன்மைகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) மிஃராஜ் பயணத்தின் பின், ஜிப்ரீல் (அலை) அவர்கள் எத்தனை நாட்கள் இமாமாக நின்று நபி (ஸல்) அவர்களுக்கு தொழுகையை நிறைவேற்றிக் காட்டினார்கள்?

(iii) “கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப் பகுதியில் தான் இலங்கையில் இஸ்லாம் பரவியிருக்கலாம்” என்று கூறும் பிரபல வரலாற்றாசிரியர் யார்? அவர் எழுதிய நூல் யாது?

(iv) “ஹஜ் கடமையான நிலையில் அதை நிறைவேற்றாது மரணித்த எமது தந்தைக்காக நாம் ஹஜ்ஜை நிறைவேற்ற முடியும்” என்பதை நபி (ஸல்) அவர்கள், எமது எச்செயலுடன் ஒப்பிட்டு விளக்கமளித்தார்கள்?

(v) பயிரிடுதல், அதற்காக நிலத்தை வளப்படுத்தல் என்பவற்றை வலியுறுத்திய நபி (ஸல்) அவர்களின் போதனைகளில் **ஒன்றைத்** தருக.

(vi) தொழுகையில் ஸுஜூது செய்யும்போது தரையில் படவேண்டிய உறுப்புக்கள் எத்தனை?

(vii) பிரதான மத்ஹபுகளில் **இரண்டின்** பெயரையும் அதன் ஸ்தாபகர்களையும் குறிப்பிடுக.

(viii) ‘உம்மத்’ என்ற சொற்பிரயோகத்தின் மொழி மற்றும் சமூக ரீதியான கருத்துக்களைத் தருக.

(ix) அல்-குர்ஆனின் இலக்கியச் சிறப்புக்கு முன்னால் தமது இயலாமையை ஏற்றுக்கொண்ட இஸ்லாத்தின் எதிரிகளாக விளங்கிய **இரு** கவிஞர்களின் பெயர்களை எழுதுக.

(x) ‘சந்தேகம் உண்டாக்காததை பின்பற்று’ என்று கூறிய நபி (ஸல்) அவர்கள், சந்தேகமூட்டக்கூடியதை எவ்வாறு கையாள வேண்டும் என உபதேசித்தார்கள்?

**2.** (i) அரசியல் நோக்கமல்லாது அகீதாவை மையமாக வைத்து தோற்றம் பெற்ற சிந்தனைப் பிரிவுகள் **இரண்டு** தருக.

(ii) ஏனைய நபிமார்களுக்கு வழங்கப்படாமல் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ள **ஆறு** சிறப்பம்சங்களையும் குறிப்பிடுக.

(iii) வாழ்க்கையில் நடுநிலைப்போக்கை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நபி (ஸல்) அவர்களது வாழ்வில் நடந்த சம்பவம் **ஒன்றை** விளக்குக.

**3.** (i) ஒரு ஆண் திருமணம் முடிப்பதற்கு தற்காலிகமாகத் தடை செய்யப்பட்ட **இருவரைக்** குறிப்பிடுக.

(ii) இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) ‘இத்தா’ என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, ஒரு பெண் அதனை நிறைவேற்றுவதால் ஏற்படுகின்ற நன்மைகள் **மூன்றை** விரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

**4.** (i) றமழான் மாத 'பர்ளான' நோன்பை விட்டு விட்டு வேறு நாட்களில் அதனை நோற்பதற்கு சலுகை வழங்கப்பட்ட **இரு** சாராரையும் குறிப்பிடுக.

(ii) ஹஜ், உம்றா மேற்கொள்ளும் போது தடை செய்யப்பட்ட விடயங்கள் **மூன்றைத்** தருக.

(iii) அபூபக்ர் (ரழி) கலீபாவாக பொறுப்பேற்றதும் அவர் மேற்கொண்ட பணிகள் **ஐந்தை** விளக்குக.

**5.** (i) அன்பு காட்டுதல் என்ற பண்போடு தொடர்பான அல்லாஹ்வின் **இரண்டு** பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) மனிதன் பிறர் மீது அன்பு செலுத்துவதனால் கிடைக்கும் பயன்கள் **மூன்றைத்** தருக.

(iii) உம்மத் எனும் கட்டமைப்பைப் பாதுகாக்க அல்குர்ஆனும் ஸுன்னாவும் வழங்கியுள்ள **ஐந்து** வழிகாட்டல்களைத் தருக.

**6.** (i) மக்காவில் நபி (ஸல்) அவர்களது த.்.வாப் பணிக்குப் பக்கபலமாக இருந்து, ஒரே ஆண்டில் மரணித்ததால் நபியவர்களின் கவலையை அதிகரிக்கச் செய்த அந்த **இருவரும்** யாவர்?

(ii) நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரத்தைத் தடுக்க குறைஷியர் கையாண்ட வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) 'ஸீரத் றஸுலுல்லாஹ்' பாதுகாக்கப்பட ஆரம்ப காலங்களில் மேற்கொள்ளப்பட்ட **மூன்று** ஆய்வு முயற்சிகளை விளக்குக.

**7.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) சுத்தத்தின் முக்கியத்துவம்

(ii) வியாபாரத்தில் பதுக்கல்

(iii) மஸ்ஜிதுந் நபவி

(iv) சூழல்சார் விழுமியங்களைக் கடைப்பிடித்தல்

❊ ❊ ❊

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO
www.LOL.LK

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න